# பிரசுரகளம்

Pirasurakalam

ஆசிரியர்: என்.செல்வராஜா

இது ஒரு நூல்தேட்டம் வெளியீடு

Editor: N. Selvarajah

இதழ்: (1) December 2009

Issue: 1


## நுழைவாயில்

**பிரசுர களம்** ஒரு புதிய முயற்சி. மின்னஞ்சல் வழியே உங்கள் இல்லம்தேடி அழையா விருந்தாளியாக உங்களைச் சந்திக்க வருகின்றது. இலங்கை இந்தியா மற்றும் ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் ஈழத்து நூல் வெளியீட்டு முயற்சிகள் பற்றிய தகவல்களை உங்களுக்கு வழங்கும் நோக்கினைப் பிரதானமாகக் கொண்டு வெளிவரும் இந்த மின்னஞ்சல் சஞ்சிகை உலகெங்குமுள்ள தமிழ் ஆர்வலர்களை வலிந்து நாடி வருகின்றது.

ஈழத்து நூல்வெளியீடுகள் பற்றிய தகவல்களை நீங்கள் உடனுக்குடன் அறிந்துகொள்வதுடன், உங்கள் இலக்கிய நண்பர்களுக்கும் இதனை அனுப்பிவைக்கலாம். ஒரு வேளை இது உங்கள் நண்பர்களின் வாயிலாகவே உங்களை நாடி வந்தடைந்திருந்தால், உங்கள் மின்னஞ்சல் முகவரியை எனக்கு நேரடியாக அனுப்பிவைப்பதன் மூலம் தொடர்ச்சியாகத் தடையின்றி நேரடியாகவே என்னிடமிருந்து பிரசுரகளத்தை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மின்னியல் வசதியுள்ள இந்த நவீன உலகிலும், ஈழத்துப் பிரசுரங்களின் வெளியீடுகள் குடத்துள்விளக்காக இருக்கின்றதே என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடே இந்த முயற்சி. ஈழத்துப் படைப்பாளிகள் எதிர்நோக்கிவரும் பாரிய குறைபாடு யாதெனில் தமக்கென்று வெளியீட்டகங்களையும் பரந்துபட்ட விநியோகத் தளத்தையும் கொண்டிராததமையாகும். இதனை ஓரளவாவது பிரசுரகளம் நிவர்த்திசெய்யமுயலும்.

பிரசுரகளம் எவ்வித வர்த்தக நோக்கத்துடனும் நடத்தப்படுவதில்லை. இதில் குறிப்பிடப்படும் நூல்களை நீங்கள் சொந்தமாகப் பெற்றுக்கொள்ள வசதியாக, குறிப்பிட்ட படைப்பாளியின் தொடர்பு விபரமும் தரப்பட்டுள்ளது. நூலைப்பெற படைப்பாளிகளுடன் நேரில் தொடர்பு கொள்ளலாம்.

ஈழத்து நூல்கள் பற்றிய உங்கள் கருத்துக்களையும் அறிமுகங்களையும் பிரசுரகளம் வரவேற்கின்றது. நூலின் பிரதியொன்றும் கட்டுரையுடன் சேர்த்துஅனுப்பப்படல் முக்கியமானது.

எழுத்தாளர்களிடையே உறவுப்பாலத்தை ஏற்படுத்துவதும் பிரசுரகளத்தின் முக்கிய வளர்ச்சிப் பணியாகும். அதனால் எழுத்தாளர்கள் பிரசுரகளம் பற்றிய தங்கள் கருத்துக்களையும் பதிவுக்காக எனக்குத் தெரிவிக்கவும். ஊலகளாவிய தமிழ் இலக்கிய நிகழ்வுகள், ஆக்க இலக்கியப் போட்டிகள், விருதுகள் பற்றிய செய்திகளையும் பிரசுரகளத்தின் வழியாக பகிர்ந்துகொள்ளலாம்.

எனது ஈழத்துத் தமிழ்நூற்பட்டியல் தொகுப்பான நூல்தேட்டம் தொகுப்புப் பணியின் நீட்சியாகவே பிரசுரகளம் கருதப்படவேண்டும் என்பது எனது தாழ்மையான விருப்பமாகும்.

நுழைவாயிலில் அதிகநேரம் தரித்து நிற்பது அழகல்ல. மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்


**என்.செல்வராஜா**
*ஆசிரியர்*
*01.12.2009*


## இந்த இதழில்...


**ஒரு அகதியின் கைரேகை.**
இணுவை சக்திதாசன்.

**கலைஞானம்: நல்லூர் பிரதேசக் கலைஞர் விபரத் திரட்டு.**
நல்லூர்ப் பிரதேசக் கலாசாரப் பேரவை, யாழ்ப்பாணம்

**ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும்: ஆய்வரங்கக் கட்டுரைகள் 2003.**
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு.
திருக்கோணமலை

**தீராத மயக்கத்திலே: சந்தப் பாடல்கள்.**
கார்மேகம் நந்தா.

**இலக்கியப் பூக்கள்**
முல்லை அமுதன்.

**ஈழத்தில் நாடகமும் நானும்.**
க.சொர்ணலிங்கம்.

**ஒரு பெண்ணென்று எழுது.**
நீ.பீ.அருளானந்தம்.

**எனது பயணங்களில்.**
ஜெயந்தன்.

**நீங்களும் எழுதலாம்**
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்



gpuRufsk; kpd;dQ;ry;y; ntsptUk; xU gUtntspaPL.
cyfshtpa <oj;Jg; gil g;ghspfspd Jk› mtufs;
rhue;j Jkhd E}y;ntspaPLfisAk› mt;tg;NghJ
gpw ,yf;fpar; nra;jpfisAk; jhq;fp ntsptUfpd;wJ.
njhlu;GfSf;F selvan@ntlworld.com

## ஒரு அகதியின் கைரேகை.




இணுவை சக்திதாசன்.
டென்மார்க்: இணுவை இளந்தென்றல் வெளியீடு,
**Kiledvangsparken 36, 4390 vipperod,**
1வது பதிப்பு, ஏப்ரல் 2009.
(டென்மார்க் சத்யன் லே அவுட்).
128 பக்கம், விலை: ரூபா 70.,
அளவு: 21.5x14 சமீ.

டென்மார்க்கிலிருந்து வெளியிடப்படும் இணுவை இளந்தென்றல் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடு. புலம்பெயர் வாழ்விலும் தமிழின் செவ்விய உயிரோட்டம் கொண்டு ஆற்றலுடன் கவிதை எழுதும் இளம் படைப்பாளிகளுள் சக்திதாசன் குறிப்பிடத்தக்கவர். இவரது கவிதைகள் புலம்பெயர்ந்த வாழ்வின் வேதனைகளை வெளிப்படுத்தும் அதே வீச்சில் அன்றாடம் இலங்கையில் நடக்கும் இன அழிப்பைக் கண்டு மனம் கொதிக்கும் போக்கையும் கொண்டிருக்கும். உடல் புகலிடத்திலும், ஆன்மா புலத்திலுமாக அவலப்படும் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலை அவரது கவிதைகளில் பிரதிபலிக்கின்றன.

தமிழக திரைப்பட இயக்குநர் பாரதி மோகன் தனது வாழ்த்துரையில் குறிப்பிடும்போது "இந்தக்கவிஞனின் அக்னி எழுத்துக்கள், ஈழக் கவியரசர் காசி ஆனந்தனின் கவிதா நெருப்பு அணைந்துவிடாமல் பற்றித் தொடரும் பாதையில் பயணப்பட்டிருக்கிறது. சக்திதாசன் போன்ற உணர்ச்சிக் கவிஞர்கள் புலம்பெயர் வாழ்வில் நம் தமிழ் ஈன்ற கவிப்போராளிகள். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டங்களை அனுபவபூர்வமாக எடுத்தியம்பும் இவன் கவிஞன் மட்டுமல்ல சமூக அறிவியல்ஞானி" என்று குறிப்பிடுகின்றார்.

லண்டன்தீபம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தொகுப்பாளர் தனதுரையில் "சக்திதாசனின் வீரியம் மிக்க சில கவிதை களைத் தான் நினைவில் வைத்திருப்பதாகக் குறிப்பிட்டு சில கவிதாவரிகளையும் எடுத்தாண்டிருந்தார். தீபம் தொலைக்காட்சியில் பணியாற்றும் அரங்கியல் கலைஞர் சாம் பிரதீபன் தமதுரையில் "புலம்பெயர் சூழலும், அந்தச் சூழலுக்கு இசைந்து வாழ்ந்தாக வேண்டிய காலத்தின் வரைபுகளும் இழந்துபோய் நினைவுகளில் மட்டும் எப்போதும் வலியெடுத்துக்கொண்டிக்கும் எம் தேசம் பற்றிய நேசமும் கவிதைகளின்பால் காதல்கொள்வோரை அதிகம் உற்பத்தியாக்கிக்கொண்டிருக்கிறது. இந்த உணர்வுத் தொற்றுகையை வாசகனில் அப்படியே அச்சொட்டாகப் பதியவைக்கும் முயற்சியின் ஒரு திருப்திதரக்கூடிய செயற்பாடாகவே சக்திதாசனின் இந்தக் கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது" என்கிறார்.

டென்மார்க் வெளிநாட்டு அரச நூலகத்தின் தமிழ்ப்பகுதி ஆலோசகர் வ.ஜீவகுமாரன் தனது உரையில் "தொலைத்துவிட்ட வாழ்வைத்தேடித் தேடி கிடைத்த வாழ்வைத் தினம்தினம் தற்கொலை செய்யும் பேரவலம் அவரது கவிதைகளில் மெத்தப்பரவிக் கிடக்கின்றது. மேடைக்கவிஞன், பாடலாசிரியர், நாடக இயக்குநர், நடிகன், அறிவிப்பாளர் என்ற பன்முகம்கொண்ட சக்திதாசன், அண்மைக்காலமாக புதுக்கவிதையில் காட்டும் ஈடுபாடும் தேடலும் அவரை புடம்போட்டு மிளிரவைத்திருப்பதை இந்தத் தொகுப்புக்கூடாகப் பயணிக்கும்பொழுது நன்கு கண்டுகொண்டேன்" என்கிறார்.

நூலாசிரியரின் தொடர்புகளுக்கு: மின்னஞ்சல் முகவரி
**kavinoviya717@gmail.com)**

## கலைஞானம்: நல்லூர் பிரதேசக் கலைஞர் விபரத் திரட்டு.



ரஜனி கந்தசாமி
(தொகுப்பாளர்),
அரியாலையூர் சி.சிவதாசன்
(எழுத்தாக்கம்).
யாழ்ப்பாணம்: நல்லூர்ப் பிரதேசக் கலாசாரப் பேரவை,
பிரதேசச் செயலகம், நல்லூர்,
1வது பதிப்பு, ஜூலை 2009.
(யாழ்ப்பாணம்: அன்ரா பதிப்பகம், கோண்டாவில் மேற்கு).
xx, 210 பக்கம், புகைப்படங்கள், தகடு, விலை: ரூபா 300.,
அளவு: 21.5x15 சமீ.

**கலைஞானம்** என்றதும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விக்கழகம், 1980-81களின் தொடங்கி கல்வியியலாளர்களுக்கும் கல்வித்துறையில் ஆர்வமுள்ளோருக்கும் பயன்தரும் ஆக்கங்களைக் கொண்டதாக வெளியிட்டுவருகின்ற ஆண்டு மலர்கள் சிலவேளைகளில் நினைவுக்கு வரக்கூடும். இன்று நான் அறிமுகத்திற்காக எடுத்துக்கொண்டுள்ள கலைஞானம் என்ற நூல் நல்லூர் பிரதேசக் கலைஞர்கள் பற்றிய ஒரு விபரத் திரட்டாகும். 230 பக்கங்கள் கொண்டதாக ரஜனி கந்தசாமி அவர்களை தொகுப்பாளராகக் கொண்டு, அரியாலையூர் சி.சிவதாசன் அவர்களின் எழுத்தாக்கத்தில் இந்நூல் வெளிவந்துள்ளது. நல்லூர் பிரதேசக் கலாசாரப் பேரவை ஜூலை 2009இல் ஒரு அமைப்புரீதியாக தொகுத்து வெளியிட்டுள்ள நல்லதொரு ஆவணம் இதுவாகும்.

இதற்கு முன்னர் வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம், டிசம்பர் 1994இல் **தமிழறிஞர் சரித்திரம்: வட்டுக்கோட்டைத் தொகுதி** என்ற தலைப்பில் 182 பக்கம்கொண்ட நூலொன்றை வெளியிட்டிருந்தது. அராலி, காரைநகர், சங்கானை, சித்தன்கேணி, சுழிபுரம், செட்டிகுறிச்சி, தொல்புரம், பண்ணாகம், மூளாய், வட்டுக்கோட்டை, வடலியடைப்பு ஆகிய 12 தொகுதிகளிலும் வாழ்ந்த, வாழ்கின்ற தமிழறிஞர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்பை இந்நூல் பதிவுசெய்திருந்தது. ஊர்களின் அகரவரிசைப்படி தொகுக்கப்பட்டிருந்த இந்நூலில் அவ்வூர்த் தமிழரிஞர்கள் பற்றிய விபரங்கள் காலவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.
பின்னாளில் **வேலணைத்தீவு புலவர்கள் வரலாறு** என்றொரு 32 பக்கம்கொண்ட சிறிய நூல் தனிமனித முயற்சியாக தி.சிவசாமி (தில்லைச்சிவன்) அவர்களால் தொகுக்கப்பெற்று, வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெளியீடாக 1995இல் வெளிவந்தது. 65 தீவகத்து இலக்கியவாதிகளை இந்நூல் ஆவணப்படுத்தியது.

இந்தப் பின்னணியில் வெளிவந்திருக்கும் கலைஞானம், நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படும் ஒரு ஆவணப்படுத்தும் பணியாக, அத்தகைய நிறுவனமயப்படுத்தலின் அனுகூலமாக அமையும், நிதி வசதி, ஆளணி உதவியுடன் கூடிய பாரிய தொடர்முயற்சியாக நல்லூர்ப் பிரதேசத்துக் கலைஞர்களை பதிவுசெய்வதாய் அமைந்துள்ளது. மானிப்பாயில் 1875இல் பிறந்து, அச்சுவேலியில் வளர்ந்து, நல்லூரிலிருந்து முழு உலகிற்கும் தொண்டாற்றிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், மற்றும் நல்லூரிலேயே 1822இல் பிறந்து வளர்ந்த ஆறுமுக

நாவலர் போன்றோர் வாழ்ந்து பெருமைபெற்ற மண் நல்லூர் பிரதேசம். பழம்பெரும் தமிழ் இராசதானி அமைந்த மண். ஈழத்தின் தமிழ்மண்ணில் முகிழ்த்த முதலாவது பல்கலைக்கழகத்தினையும் அதன் பங்காளர்களான பல புத்திஜீவிகளையும் கொண்ட மண். தமிழ் உலகின் பிரசித்திபெற்ற நல்லூர் முருகன் ஆலயத்தையும், அதன் பின்னணியில் தழைத்தோங்கிய ஆன்மீகவாதிகளையும் தாங்கிய மண். அந்த மண்ணிலே பிறந்தவர்களும், அயல்பிரதேசத்தில் பிறந்து நல்லூர் பிரதேசத்தில் தமது பணிகளை ஆற்றியவர்களும் என்று ஒரு பரந்து விரிந்த புலமைப் பாரம்பரியத்தின் வரலாற்றை இந்நூலில் பதிவு செய்திருக்கிறார்கள். அத்தகைய 221 பிரமுகர்களின் கலை இலக்கியப் பணிகள் பற்றிய ஒரு பக்கத்தைத் தாண்டாத விபரப் பதிவுகளுடன் அவர்களது புகைப்படங்களையும் உள்ளடக்கியதாக இவ்வாவணப்பதிவு வெளிவந்துள்ளது. இப்பணியில் ஈடுபட்டுழைத்த பிரதேசச் செயலர் செந்தில்நந்தனன் முதல், தகவல்களைச் சேகரித்து வழங்கிய கலாச்சார உத்தியோகத்தர்கள் ஈறாக இன்றைய காலத்தின் தேவையான இப்பெரு முயற்சியில் அங்கம்வகித்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். எமது மண் வரலாற்றுப் பெருமைபெற்ற அதேவேளை, அதன் வரலாற்றைப் பேணிப் பாதுகாக்கும் அக்கறை அற்றதொரு பெரும்பான்மைச் சமூகத்தையும் தன்னகத்தே கொண்டது. தனது நூலையோ கட்டுரையையோ தன் வீட்டிலேயே சேகரித்து வைக்காத அக்கறையற்ற எழுத்தாளர்களையும், தமது கலைத் திறமைகளை உலகை நோக்கிப் பெரும் எழுச்சியுடன் திருப்பமுயலாத கலைஞர்களையும் அதிகமாகக் கொண்டதொரு சமூகம் எம்முடையது. குடத்துள் விளக்காக ஒளிர்ந்து வந்த எமது இனத்தின் விழுமியங்களை உணர்ந்தவர்களாக அதே சமூகத்திலிருந்து கிளர்ந்தெழுந்து அவ்வப்போது ஒருசில முயற்சியாளர்கள் எம்மவரின் வாழ்க்கைப்பணிகளை அடுத்த தலைமுறையினருக்கு பதிவுசெய்துவந்திருப்பதும் எமது வரலாறு. தமிழ்ப்புலவர்களின் சரிதங்களைத் தொகுத்துக் கூற எழுந்த முதனூலும் தமிழ் மொழியில் வெளிவந்த முதலாவது தமிழ்ப்புலவர் சரித்திர நூலும் ஈழத்தவரால் இயற்றப்பெற்று ஈழத்திலேயே வெளியிடப்பெற்றவையாகும் என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும். இவற்றிலே முன்னையது கற்பிட்டி சைமன் காசிச்செட்டி (1807-1860) ஆங்கிலத்தில் எழுதி 1859இல் வெளிவந்த "தமிழ் புளுராக்" ஆகும். பின்னையது அ.சதாசிவம்பிள்ளை (1820 -1895) எழுதி 1886இல் வெளியிட்ட **பாவலர் சரித்திர தீபகம்** ஆகும்.

பின்னாளில் வெளிவந்த பல வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள், தனிப்பட்டவர்களின் தீவிர முயற்சியாலே அவ்வப்போது தனி நூல்களாகவே உருவாகியிருந்தன. நூல்தேட்டத்தின் ஆறு தொகுதிகளிலும் இருநூறுக்கும் அதிகமான நூல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தினதும் பொதுப்படையான அம்சம் அவை தனிப்பட்டவர்களால், வரையறைக்குட்பட்ட நிதி மற்றும் ஆளணி வளங்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளமையாகும். மேலும் இவற்றில் பெரும்பாலானவை கட்டுரை உருவில் அமைந்த வரலாற்றுப் பதிவுகள். இவை எவையும் பின்னாளில் தொடர்ச்சியாக திருத்திய மீள் பதிப்பினைக் காணவில்லை. தனிநூல்களாக (Monograph) வெளிவந்த இவை உள்ளடக்கிய தகவல்கள் அவை வெளிவந்த காலகட்டத்துக்குள் அடங்கிப்போனவையே. தற்போது வெளிவந்துள்ள கலைஞானம்: நல்லூர்ப் பிரதேசக் கலைஞர் விபரத்திரட்டுக்கும் மேற்கண்ட தனிநபர் நூல் வெளியீடுகளுக்கும் இடையே பாரிய வேறுபாடு ஒன்றுண்டு. கலைஞானம் அமைப்புரீதியாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்து கலை இலக்கிய வளத்தை தொடர்ச்சியாகப் பதிவுசெய்து பராமரிக்கும் வல்லமை கொண்டது என்று நம்புகின்றேன்.

## ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும்: ஆய்வரங்கக் கட்டுரைகள் 2003.

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு.
திருக்கோணமலை: சீ.ஏ.மோகன் றாஸ், கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்,
1வது பதிப்பு, ஒக்டோபர் 2003.
(திருக்கோணமலை: றெயின்போ மினிலாப், 361 B, நீதிமன்ற வீதி).
126 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.




வடக்கு-கிழக்கு மாகாண அரசு நடத்திய தமிழ் இலக்கிய விழாவின்போது *இதழியலின் வரலாறும் மதிப்பீடும்* என்ற தலைப்பிலான கருத்தரங்கு இடம்பெற்றது. அக்கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். **பத்திரிகைகள்** என்ற தலைப்பில் இலங்கையின் இதழியல் வரலாறும் மதிப்பீடும் (க.அருளானந்தன்), இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை வரலாறு ஒரு நோக்கு (அம்மன்கிளி முருகதாஸ்), ஈழத்து இதழியலில் தேசியத் தமிழ் நாளிதழ்களின் தோற்றமும் இலக்கியப் பங்களிப்பும் (புரட்சிபாலன்), சுதந்திரத்துக்குப் பின் ஈழத்தில் தமிழ்ப் பத்திரிகைத்துறை வளர்ச்சி: ஒரு நோக்கு (வல்வை ந.அனந்தராஜ்) ஆகிய நான்கு கட்டுரைகளும், **பருவகால இதழ்கள்** என்ற தலைப்பின்கீழ் ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகள் ஒரு நோக்கு (சே.யோகராசா), ஈழத்தில் பெண்கள் சார் தமிழ் சஞ்சிகைகள் வரவும் தேவையும் குறித்த நோக்கு (றூபி வலன்ரீனா பிரான்சிஸ்), இலங்கைத் தமிழாய்வுச் சஞ்சிகைகளில் பண்பாடு (வே.செவ்வேட்குமரன்), ஈழத்து சஞ்சிகை வரலாற்றிலே மூன்று நகைச்சுவை ஏடுகள் (திக்கவயல் சி.தர்மகுலசிங்கம்) ஆகிய நான்கு கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.




## தீராத மயக்கத்திலே: சந்தப் பாடல்கள்.

கார்மேகம் நந்தா. கோயம்புத்தூர் 641001: விஜயா பதிப்பகம், 20 ராஜ வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (சென்னை 5: ஜோதி எண்டர்பிரைசஸ்). 212 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22.5x14.5 சமீ.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை வானொலியில் ஆயிரத்துக்கும் அதிகமான மெல்லிசைப்பாடல்களை எழுதி வானலையில் வழங்கிய கார்மேகம் நந்தாவின் 170 தேர்ந்த பாடல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவை 1977-2008 காலப்பகுதியில் எழுதப்பட்டவை. கவிப்பதியம், பெற்ற தாயும் பிறந்த மண்ணும் பேசும் மொழியும், அன்பின் வழி, பேரின்பம், காதலின் உணர்வுகள், இயற்கையின் தோற்றங்கள், வாழ்வும் கலையும் ஆகிய பிரிவுகளுக்குள் இப்பாடல்கள் வகைபிரித்துத் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் இப்பாடல்கள் ஒவ்வொன்றும் இயற்றப்பட்ட காலம், இசையமைத்தவர், மெட்டமைத்தவர், பின்னணி பாடகர் ஆகியோரின் விபரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

மெல்லிசை என்றதும் எமக்கு மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன்-ராமமூர்த்தியின் பெயர்தான் தவிர்க்கமுடியாதபடி மனதில் முதலில் தோன்றுகின்றது. எமது கலை வடிவங்களும், இசைவடிவங்களும் இலக்கிய வடிவங்களும் தமிழகத்திலிருந்தே எங்களிடம் வந்துசேர்ந்ததாக எழுதி வைத்துள்ளார்கள். இலங்கையில் கலைகளையும், இலக்கியங்களையும் வளர்த்தெடுக்கவும், ஈழத்து முத்திரையுடன் அதன் தனித்துவத்தைப் பேணவும் எமக்கென்றொரு பாரம்பரியக் கலையை வளர்த்தெடுக்கவும் ஆங்காங்கே அவ்வப்போது பல கலைஞர்கள் தமது வாழ்நாளை ஈழத்து மண்ணிலும் அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாததொரு உண்மையாகும்.

இன்று இசை என்றாலும், பாடல் என்றாலும் அது தமிழ்த் திரைப்படங்களுக்கூடாக வெளிக்கொண்டுவரப்படும்போது தான் எமது மக்களின் மனதைத் திருப்திப்படுத்துவதாக உள்ளது. பக்திப்பாடல்கள் கூட தமிழ்ச் சினிமாவில் வந்தால் அல்லது தமிழகத் திரைப்பட பின்னணிப் பாடகரிகளின் வாயிலிருந்து வந்தால் தான் எங்கள் குஞ்சு குருமான்களிலிருந்து வயதானவர்கள் வரை அப்பாடல்களை செவிக்கினியதாக முணுமுணுக்க வைக்கின்றது. இதுவே யதார்த்தமாகிவிட்ட சூழலில், ஈழத்துப் பாடல்களை தனித்துவமாக இலங்கையில் பாடல் வரிகளாக எழுதி, அதை கைவசமுள்ள வரையறுக்கப்பட்ட வளத்துடன், கிடைத்த வாத்தியக்கருவிகளின் உதவியுடன் இசையமைத்து, மேடை களில் பாடி மக்களின் மனதில் இடம்பிடிப்பதென்பது பெரிய யாகமாகத்தான் ஒரு காலத்தில் மேற்கொள்ளவேண்டியிருந்தது.

இந்நிலையில் இலங்கை வானொலி ஈழத்துப் பாடல்களுக்கு 1970-71 காலப்பகுதியில் இருகரம் நீட்டிய வரவேற்பை வழங்கியிருந்தது. அக்காலகட்டத்தில் H.M.B.முகைதீன் அவர்கள் இலங்கை வானொலியின் பணிப்பாளர் சபையில் அங்கம் வகித்திருந்தார். அவரது முயற்சியால் மெல்லிசைப்பாடல்கள் என்ற நிகழ்ச்சியை நடத்த தமிழ்ச்சேவைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஈழத்து இரத்தினம் எழுதிய பல பாடல்கள் அக்காலத்தில் வானலைகளில் தவழ்ந்தன. ஈழத்து இரத்தினம் தமிழகத் திரைப்படங்களுக்கும் பாடல் எழுதிவந்ததால் அவர் இலங்கையிலும் பிரபல்யமானவராக இருந்தார். ஈழத்துப்பாடல்கள் என்ற பெயரிலும் மெல்லிசைப்பாடல்கள் அவ்வப்போது ஒலிபரப்பாகின. ஈழம் என்ற சொல் பின்னாளில் இலங்கை அரசின் வயிற்றில் புளியைக் கரைத்ததால் ஈழத்துப்பாடல் என்ற பதம் மாத்திரமல்ல சில ஈழத்துப் பாடல்களும் தடைசெய்யப்பட்டன. குலசிலநாதனின் “ஈழத் திருநாடே என்னருமை தாயகமே..” என்ற பாடல் தமிழர்களின் காதுகளை எட்டாது தடுக்கப்பட்டது. சி.மௌனகுரு எழுதிய “சின்னச் சின்ன குருவிகள்...” என்ற அழகான சிறுவர் பாடல்கூட அதில் வந்த “நாளை இந்த ஈழநாட்டை நடத்தப்போகும் குருவிகள்..” என்ற வரிகளுக்காகத் தடைசெய்யப்பட்டது.

இலங்கை வானொலி அறிவிப்பாளராக இருந்த பரா என்றழைக்கப்படும் எஸ்.கே.பரராஜசிங்கம் மெல்லிசைத்துறையிலும் பாடகராக ஈடுபாடு காட்டிவந்தார். அக்காலத்தில் இலங்கை வானொலியின் இசைப்பகுதியில் பணியாற்றிய பலரின் இசையமைப்பிலும் பல பாடல்கள் வெளியாகின. எம்.முத்துசாமி, லத்தீப், றொக்சாமி, T.V.பிச்சையப்பா. கண்ணன்-நேசன் போன்ற திறமைமிக்க இசையமைப்பாளர்களை இலங்கை வானொலி எமக்கு அறிமுகப்படுத்தியது.

தமிழகத்து இசைக் கலைஞர்களுடன் எமது கலைஞர்களை ஒப்பிட்டுத் தரம்பார்க்கும் கூட்டமொன்று அக்காலகட்டத்திலும் இருந்தபோதிலும், தமது தனித்துவமான கலையார்வத்தால் இலங்கையில் மெல்லிசைத்துறையைக் கருகவிடாது ஈழத்துக் கலைஞர்கள் தமது சொந்த நிதிவளத்தில் காத்துவந்தார்கள். இன்று ஈழத்தின் மெல்லிசைத்துறை உலகளாவிய தமிழர்களின் கரங்களில் புதுப்பொலிவுபெற்றுத் திகழ்கின்றது. இன்று நாம் காணும் இறுவட்டுக்களின் வெளியீடுகளின் எண்ணிக்கையைப் பார்க்க மலைப்பாக இருக்கின்றது. அன்றைய கடின உழைப்பின் தொடர் விளைவுகளே இவை.

ஈழத்து மெல்லிசைத்துறையை ஆரம்பத்தில் உதிரத்தை வியர்வையாக்கி வளர்த்த பலர் இன்று மறைந்துவிட்டாலும், அவர்களின் வழியொற்றி வளர்ந்த பலர் தாயகத்திலும் புகலிடத்திலும் வீறுடன் அப்பணியைத் தொடர்ந்த வண்ணமே உள்ளனர். அவ்வகையில் நோர்வேயில் தற்பொது புலம்பெயர்ந்து வாழும் கார்மேகம் நந்தா என்ற கலைஞர் முக்கியமானவராகக் கருதப்படுகின்றார். 1973இல் இலங்கை வானொலியில் பேசும் சித்திரம் நிகழ்ச்சியில் அறிமுகமாகி, திரு. நா.மகேசன் வானொலி மாமாவாக இருந்த காலத்தில்-1976ம் ஆண்டில்- சிறுவர் மலர் நிகழ்ச்சிக்கு கவிதைகளை வழங்கிய நந்தா, பின்னர் கோபுர தரிசனம் என்ற சமய நிகழ்ச்சிக்குப் பக்திப்பாடல்களையும் இயற்றி வழங்கித் தன் இசைப்பயணத்தைத் தொடர்ந்தார். கார்மேகம் நந்தா 1979இல் ஈழத்து மெல்லிசைப்பாடகர்களின் முன்னொடியான எம்.முத்துசாமியின் மகனான மோகன்ராஜின் இசையமைப்பில் ஈழத்துப்பாடகர் அருந்ததி சிறீரங்கநாதனின் குரலில் பாடப்பெற்ற “இளந்தென்றல் காற்றவீசும்..” என்ற பாடலை இயற்றியதன் மூலம் ஈழத்து மெல்லிசை உலகில் அழியாத தடத்தைப் பதித்தவர். இன்றளவில் 1300 பாடல்களுக்கு மேல் இயற்றியுள்ள கார்மேகம் நந்தாவின் பாடல்களை 50க்கும் மேற்பட்ட பாடகர்கள் பாடியுள்ளார்கள். இவற்றில் பல பாடல்கள் ஒலிவடிவில் இறுவட்டுக்களாகவும்

வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அரங்கேற்றம் கண்ட இவரது 33 ஆண்டுக்கால அறுவடையின் ஒரு சிறு பகுதியே **தீராத மயக்கத்திலே** என்ற மெல்லிசைப் பாடல்களின் தொகுப்பாகி இன்று 170 மெல்லிசைப் பாடல்களின் வரிவடிவத்தைத் தாங்கி அழகிய நூலாக வெளிவந்துள்ளது. இவை 1976முதல் 2008 வரை இவர் எழுதிய மெல்லிசைப் பாடல்களிலிருந்து தொகுக்கப்பெற்றவையாகும்.

இந்நூல் ஏழு பிரிவுகளில் கார்மேகம் நந்தாவின் பாடல்களை உள்ளடக்குகின்றது. **கவிப்பதியம்** என்ற முதலாவது பிரிவில், இவர் எழுதிய ஒரு கவிதை வானலையலையில் ஒலிபரப்பாதுவிட்ட கடுப்பிலும், ஏக்கத்திலும் வானொலி மாமாவிடம் விளக்கம் கேட்டு எழுதிய கவிதைவரிகளுடன் தொடங்குகின்றது. அடுத்ததாக அவர் சிறுவர் மலர் நிகழ்ச்சிக்காக எழுதி தேர்வுபெறாமல்போன பசுவின் மகிமை பற்றிய புதுக் கவிதையுடன் இக்கவிப்பதியம் நிறைவுறுகின்றது. அடுத்ததாக **பெற்ற தாயும் பிறந்த மண்ணும் பேசும் மொழியும்** என்ற பிரிவில், தாய்மை, தாலாட்டு, தாய்மண் மற்றும் தமிழ்த் தாய் பற்றிய பாடல்வரிகள் நெஞ்சை நிறைக்கின்றன. கார்மேகம் நந்தாவின் பாடல்களில் அடிக்கடி ஐபீசீ வானொலியில் காலைக்கலசத்தில் இடம்பெற்று வரும் “தாய்முகமும் தாயகமும் ஒன்றல்லவா...,” என்ற பாடலும் இப்பிரிவுக்குள் வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மூன்றாவதாக **அன்பின் வழி** என்ற பிரிவுக்குள், அன்பு, பாசம், இயற்கையின் ஒன்றிப்பு, சமாதான வேட்கை, கருணை, போரற்ற உலகம் போன்ற கருத்துக்களை விதைக்கும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. **பேரின்பம்** என்ற நான்காவது பிரிவுக்குள் இயற்கையைப் போற்றல், இறைவணக்கம், ஆன்மீகம் சார்ந்த பக்திரசப் பாடல்கள் இடம்பெறுகின்றன. **காதலின் உணர்வுகள்** என்ற ஐந்தாவது பிரிவுக்குள் மானுடக் காதலை மாத்திரமன்றி இயற்கையிலும் கலையிலும் குறிப்பாக இசையிலும் தான் கொண்ட காதல் பற்றி யாத்த பாடல்களைப் பதிவுசெய்துள்ளார். **இயற்கையின் தோற்றங்கள்** என்ற ஆறாவது பிரிவுக்குள் இயற்கை பற்றியும், இயற்கையின் சீற்றமாகிய சுநாமி பற்றியும் இவர் எழுதிய பாடல்கள் அமைகின்றன. **வாழ்வும் கலையும்** என்ற ஏழாவது பிரிவில் பெரும்பாலும் கிராமியப் பாடல்களும் வயற்பாடல்களும், தொழில்சார்ந்த பாடல்களும் இடம்பெறுகின்றன.

இத்தொகுப்பின் இறுதியில் பின்னிணைப்பாக, பாடல்கள் பதிவுபெற்றுள்ள ஒழுங்கில் அப்பாடல்கள் இயற்றிய காலம், அது முதலாவதாக ஒலிபரப்பப்பட்ட நிகழ்வு, இசையமைத்தவர் பெயர், குரல் தந்த பாடகர் பெயர் என்பன தரப்பட்டுள்ளன.

கார்மேகம் நந்தா என்ற ஒரு தனிமனிதனின் கவிதைப் பாரம்பரியம் எமது இனத்தின் தனித்துவமான மெல்லிசைப்பாடல் வரலாற்றின் ஒரு கூறு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவ்வகையில் இக்கலைஞனின், கவிஞனின் அனைத்துப் பாடல்களும் தொகுத்து ஆவணமாக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வெறும் கவிதைத்தொகுதியாக இந்நூல் அமைந்துவிடப்போவதில்லை என்பதை வரலாறு எமக்கு நிச்சயம் காட்டிச்செல்லும்.

கவிஞர் கார்மேகம் நந்தாவின் நூலைப் போன்று மேலும் பல நூல்கள் ஆவணமாக்கப்படவேண்டும். அவற்றுக்கான நிதிவளத்தைத் தானே பெற்றுக்கொள்ளும்படியான நிலையை படைப்பாளிக்கு ஏற்படுத்தக்கூடாது. தனிநபர்களை நிர்ப்பந்திக்காது, எமது தமிழ்ச் சமூகம் தானாக முன்வந்து கூட்டுறவு முறையிலாவது அப்பணியை தாயகத்தினதும், தாய்மொழியினதும் பெயரால் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். இந்த உணர்வு எம்மைத் தாக்கி விழிப்படையச் செய்யும்வரை கலாச்சார அழிவுகள் தொடர்ந்துகொண்டே இருக்கும். அதற்கு நாமும் உடந்தையானவர்களாகவே வரலாற்றில் பதியப்படுவோம்.

---




## இலக்கியப் பூக்கள்

முல்லை அமுதன்.
(இயற்பெயர்: இ.மகேந்திரன்).
லண்டன்: காற்றுவெளி,
34 Redriffe Road, Plaistow
E13 0JX,
1வது பதிப்பு, ஆவணி 2008.
(சென்னை 600002: காந்தளகம்,
68 அண்ணா சாலை).
371 பக்கம், புகைப்படங்கள்,
விலை: இந்திய ரூபா 200.,
அளவு: 22.5x14.5 சமீ.,
ISBN: 978-0-9559585-0-2.

லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர் முல்லை அமுதன், ஈழத்துத் தமிழ் நூல்களைச் சேகரித்து ஆண்டுதோறும் லண்டனில் கண்காட்சிகளையும், மறைந்த எழுத்தாளர்கள் பற்றிய காட்சிப்படுத்தல்களையும் தொடர்ந்து மேற்கொண்டுவருபவர். இந்நூலில், அமரத்துவமடைந்த ஈழத்து எழுத்தாளர்களின் வாழ்வும் பணியும் பற்றிப் பல்வேறு தமிழறிஞர்கள் எழுதிய 44 கட்டுரைகளைத் தொகுத்து நூலுருவாக்கியுள்ளார். ஈழத்துப் பூதன்தேவனார், ம.க.வேற்பிள்ளை, சு.சிவபாதசுந்தரனார், ம.வே. திருஞானசம்பந்தபிள்ளை, ம.வே.மகாலிங்கசிவம், சி.கணபதிப்பிள்ளை, தனிநாயகம் அடிகள், த.க.ஞானப்பிரகாசம், தேவசகாயம்பிள்ளை, கனக செந்திநாதன், ச.பஞ்சாட்சரசர்மா, வ.இராசையா, பண்டிதர் வடிவேல், கிருஷ்ணா வைகுந்தவாசன், சிவ.விவேகானந்த முதலியார், சு.வேலுப்பிள்ளை, அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, தி.ச.வரதராசன் (வரதர்), நந்தி, தில்லைச்சிவன், சொக்கன், மிக்கேல்பிள்ளை, க.கைலாசபதி, யாழ்வாணன், ஏ.ஜே.கனகரத்தினா, அப்பச்சி மகாலிங்கம், நாவண்ணன், மு.தளையசிங்கம், தருமு சிவராம், செ.கதிர்காமநாதன், அங்கயன் கைலாசநாதன், செ.யோகநாதன், செம்பியன் செல்வன், அ.சிவராஜா, சிலோன் விஜயேந்திரன். ராஜ ஸ்ரீகாந்தன், சு.வில்வரத்தினம், சி.புஷ்பராஜா, சிவலிங்கம் சிவபாலன், கணபதி கணேசன், முல்லையூரான், குமார் மூர்த்தி, சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய 44 எழுத்தாளர்கள் பற்றிய பதிவுகள் இப்பாரிய தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் நூலாசிரியர் முல்லை அமுதனுடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளலாம்:

**R.Mahendran**
**34 Redriffe Road,**
**Plaistow**
**London E13 0JX,**
**United Kingdom**

## ஈழத்தில் நாடகமும் நானும்.

க.சொர்ணலிங்கம்.
இலண்டன் N4 1LU: ஈழவர் திரைக்கலை மன்றம், 39, Hermitage Road,
2வது பதிப்பு, 2008, 1வது பதிப்பு, 1968. (சென்னை 600091: பொன்னி).
xLviii, 216 பக்கம், 24 தகடுகள், விலை: இந்திய ரூபா 220., அளவு: 21.5x14 சமீ.

கலையரசு க.சொர்ணலிங்கம் அவர்கள் எழுதிய **ஈழத்தில் நாடகமும் நானும்** என்ற நூல் மீள்பிரசுரம் பெற்று வெளிவந்துள்ளது. 1968ம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருந்த இந்த அரிய நூல், நாற்பது ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணம் நவாலியைச் சேர்ந்தவரும், தற்போது லண்டனில் வாழ்பவருமான பாரிஸ்டர் எஸ்.ஜே.ஜோசெவ் அவர்களின் பெருமுயற்சியால் தமிழகத்தில் அச்சிடப்பட்டு 2008இல் இன்று மீள்பதிப்புக்கண்டுள்ளது.

லண்டனில் இயங்கும் ஈழவர் திரைக்கலை மன்றம் இந்நூலை மீள்பதிப்புச் செய்து வெளியிட்டுள்ளது. இதில் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் 19ம் நூற்றாண்டில் பிறந்த இந்த ஈழத்துக் கலைஞரின் வாழ்வும் பணியும் 20ம் நூற்றாண்டில் எழுதப்பட்டு இன்று 21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மீள்பதிப்புக் கண்டுள்ளது.

ஈழத்துத் தமிழ் நாடகத்தின் தந்தை என்று புகழப்படும் கலையரசு க.சொர்ணலிங்கம், 30.3.1889இல் யாழ்ப்பாணம் நவாலியில் பிறந்தவர். இவர் 26.7.1982இல் தனது 93ஆவது வயதில் மறைந்துவிட்ட போதிலும் இன்றளவில் அவரது மாணாக்கர்களாலும் ரசிகர்களாலும் போற்றப்பட்டு வருகின்றார். நாடகக் கலையை யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் இழிவானதாகக் கருதிய ஒரு காலகட்டத்தில் அதன் கலைத்துவத்தை மதித்து புரட்சியாளனாக – நாடகத்துறையைத் தனது முழுநேர உழைப்பாக வரித்துக்கொண்டவர் கலையரசு சொர்ணலிங்கம். அதன்மூலம் ஒரு சமூக விழிப்புணர்வினையும் ஏற்படுத்தியவர்.

கலைஞர்கள் ஒழுக்கமுடன் இருக்கவேண்டும் என்பதை வாழ்ந்து காட்டிய ஒழுக்கசீலர் கலையரசு சொர்ணலிங்கம். அவர் உருவாக்கிய நூற்றுக்கணக்கான அற்புத கலைஞர்கள் வரிசையில் சானா-சண்முகநாதன், விதானையார்-கே.செல்வரட்ணம், சரவணமுத்து ராஜலிங்கம், அருமைநாயகம், என ஒரு கலைஞர் கூட்டத்தையே குறிப்பிடலாம். அவருடன் பணியாற்றிய எஸ்ரி.அரசு, லடிஸ் வீரமணி, குழந்தை சண்முகலிங்கம் என பிறிதொரு கலைக்குடும்பமும் ஈழத்துக் கலை வரலாற்றில் இன்றும் தொடர்கின்றது.

கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகத்துறைத் திறமைகள் ஏராளம். ஒரு நடிகனாக நின்று அவர் அரங்கேற்றிய வித்தியாசமான பாத்திரங்களின் எண்ணிக்கை திகைப்புக்குரியவை. **வயோதிப விடுதியில் விசித்திர சம்பவம்** என்ற ஒரு நாடகத்தில் ஒரே மேடையில் - மனோகரன், கூனி, தத்தன், ஷைலொக், பரதன், விஸ்வாமித்திரன், செம்படவன் என்ற வரிசையில் ஒன்பது பாத்திரங்களை ஏற்று குரல்வளத்தால் தன் பாத்திரங்களுக்கு உயிரூட்டி நடித்திருந்தார்.




இவர் **ஈழத்தில் நாடகமும் நானும்** என்ற தலைப்பில் தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதிவந்த வரலாற்றுக் கட்டுரையை 1968இல் நூலுருவில் கொண்டுவந்தார். அது ஈழத்து நவீன நாடக வரலாற்றினை எழுத்துருவில் வெளிக்கொணர்ந்த முதலாவது நூல் என்ற பெருமையினைப் பெற்றிருந்தது. இந்நூலினுள் ஈழத்து நாடக வரலாற்றுடன் தமிழக நாடக நடப்புகள் பற்றிய பல அரிய செய்திகளும் ஏராளமாக விரவிக் கிடக்கின்றன. ஆர்மோனியம் முதன்முதலாக இலங்கைக்கு இசை நாடகங்களில் பயன்படுத்தப்பட்ட தகவல்கள், பம்மல் சம்பந்த முதலியாரைச் சந்தித்தது, நாடக மன்றம் தொடங்கிச் செயற்பட்டது, தமிழ் இசை நாடகங்களை இலங்கையில் பரவலாக்கியது போன்ற பல தகவல்களை இந்நூலில் வாசித்து அறிய முடிகின்றது.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் சிறுவயது முதலே நாடகராக வேண்டுமென்ற அவாவினால் 1913ம் ஆண்டில் இலங்காசுபோத விலாச சபா என்னும் நாடக சபையை இங்கு ஸ்தாபிப்பதில் ஆர்வம் காட்டினார். அக்காலத்தில் நாடக சபாக்கள் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு வந்து நாடகங்களை நடாத்திச் சென்றுவந்துள்ளார்கள். ஆரம்ப காலத்தில் மனோகரன், வேதாள உலகம், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, தேரோட்டி மகன் போன்றவை இவரது ஆரம்பகால நாடகங்களாயிருந்தன. பின்னாளில் இவர் தத்தன், ஈயாகாமன். சித்திரசேனன், அச்சுதன் ஆகிய பாத்திரங்களில் நடித்துச் சிறப்புப்பெற்றார்.

கலையரசு அவர்கள் தான் கைப்பட எழுதிய இந்நூல் ஈழத்துக் கலைஞர்களை மட்டுமல்லாது தமிழ்நாட்டுக் கலைஞர்களைப் பற்றிய பதிவாகவும் திகழ்கின்றது. இன்றைய தலைமுறையினர் எமது கலைஞர்கள் பற்றிய தகவல்களை மறந்துவிடாதிருக்க இத்தகைய நூல்களின் மீள்பதிப்புகள் மிகவும் அவசியமானது என்ற வகையில் இந்நூலின் வருகை வரவேற்கத்தக்கதாகும். நாடகக் கலைஞர் ஒவ்வொருவரும் ஈழத்தின் ஒரு காலகட்ட கலை வரலாற்றை அறியத்தரும் இந்நூலை வாங்கிப் பாதுகாத்துவைத்திருக்க வேண்டியது முக்கியமானதாகும்.

*வெளிவந்துவிட்டது*

*தமிழ் பேசும் இலங்கை எழுத்தாளர்களின் ஆங்கில நூல்களுக்கான முதலாவது நூற்பட்டியல்*

**NOOLTHETTAM** *விலை: ஸ்டேர்லிங் பவுண் 15.00*

**உங்கள் நாட்டிலுள்ள ஆய்வு நூலகங்களிலும் உசாத்துணை நூலாகப் பேண, ஒரு பிரதியை வாங்கி உங்கள் அன்பளிப்பாக அவர்களுக்கு அனுப்பிவையுங்கள்.**

**இலங்கைத் தமிழரின் விழுமியங்களை உலகம் அறிந்திடவைப்போம்**

*பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளவும்:*

**N.Selvarajah, 48 Hallwicks Road, Luton. LU2 9BH. United Kingdom**

**E-mail: selvan@ntlworld.com**

## ஒரு பெண்ணென்று எழுது.



நீ.பீ.அருளானந்தம்.
கல்கிசை: திருமகள் பதிப்பகம், இல.7, லில்லியன் சாலை,
1வது பதிப்பு, ஆனி 2008.
(தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரதநிலைய வீதி).
**xviii**, 188 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ.,
**ISBN**: 978-955-1055-04-2.

இலங்கையில் ஒரு முழுநேர எழுத்தாளனாகத் தன்னை இனம்காட்டிக்கொண்டிருப்பவர் எழுத்தாளர் நீ.பீ.அருளானந்தம். 2002இல் வெளிவந்த மாற்றங்களை மறுப்பதற்கில்லை, 2003இல் வெளிவந்த கபளிகரம், 2004இல் வெளிவந்த ஆமைக்குணம், 2005இல் வெளிவந்த கறுப்பு ஞாயிறு, 2007இல் வெளிவந்த அகதி ஆகிய இவரது ஐந்து சிறுகதைத் தொகுதிகளின் வரிசையில் ஆறாவது வரவாக ஆனி 2008இல் வெளிவந்த **ஒரு பெண்ணென்று எழுது** என்ற சிறுகதைத் தொகுதி அமைகின்றது. தான் அண்மைக் காலத்தில் எழுதிய 16 சிறுகதைகளை இத்தொகுப்பில் இடம்பெறச்செய்துள்ளார். இவரது முன்னைய சிறுகதைத் தொகுப்புகளில் **கறுப்பு ஞாயிறு** – என்ற தொகுப்பு நூல் இலங்கை அரசின் 2005க்கான சிறுகதைத் துறையில் அரச இலக்கிய விருதுக்காகத் தேர்வுசெய்யப்பட்டு, 2006இல் இவருக்கு வழங்கப்பட்டது.

நீ.பீ.அருளானந்தம் எழுதிய **வாழ்க்கையின் நிறங்கள்** என்ற நாவலும் இரண்டு தடவைகள் பரிசுபெற்ற நாவலாகும். இயற்கை அழகும் செழிப்பும் கொண்ட வன்னிமண்ணில் பிறந்து சுமார் 40 ஆண்டுகளை அங்கு இன்பமாகக் கழித்த நூலாசிரியரின் பசுமையான ஆரம்பகால நினைவுகள் 40 ஆண்டுகளை முன்நகர்த்தி இந்நாவலில் இயல்பாகப் படர்கின்றன. 2006க்கான நாவல் துறையில் அரச இலக்கிய விருது இந்நூலுக்காக 2007இல் வழங்கப்பட்டது. வடமாகாணத் தமிழ் இலக்கிய விழா 2006ம் ஆண்டுக்கான இலக்கியப் பரிசையும் வென்ற நூல் இதுவாகும்.

தனது முதலாவது சிறுகதைத் தொகுப்பை 2002இல் வெளியிட்ட நீ.பீ.அருளானந்தம், கவிதை புனைகதை, தொலைக்காட்சி நாடகம், நடிப்பு என்று பல்வேறு தளங்களில் காலூன்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. நீ.பீ.அருளானந்தம் எழுதிய கவிதை நூலொன்றும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். **வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து** என்ற தலைப்பில் 2008இல் தனது முதலாவது கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருந்தார். மண்வாசனை, யதார்த்த நிலை என்பவற்றைத் தன கவிதைகளில் பதித்து, அனுபவரீதியாகத் தான் கண்டனுபவித்தவைகளையே கருவாகப் பயன்படுத்துவதால் வாசகனை நிதர்சன உலகில் சஞ்சரிக்க வைக்கிறார். இவரது கவிதைகளில் சமூக அவலங்களும் தாக்கங்களும் அழுத்தமாகப் பதியப்பெறுகின்றன. 101 கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

கணையாளி, தாமரை பொன்ற தமிழகச் சிற்றேடுகளிலும் இவரது 15க்கும் மேற்பட்ட கதைகள் பிரசுரமாகியுள்ளன. தமிழகத்தின் பாலம் மாத இதழ் நடத்திய வல்லிக்கண்ணன் சர்வதேச சிறுகதைப் போட்டியில் **இரத்தம் கிளர்த்தும் முள்முடி** என்ற சிறுகதைக்கு முதற்பரிசினைப் பெற்றும் தனது முத்திரையைப் பதிந்துள்ளார். பாலம் ஆசிரியர் கலியாண சுந்தரம் பிறந்தநாள் விழாவில் ஞானபீட விருதுபெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனிடமிருந்து 10000 ரூபா பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்பட்டமையும் ஈழத்துப் படைப்பாளி என்ற வகையில் இவருக்குக் கிடைத்த மற்றுமொரு பெருமையாக இவர் கருதுகின்றார்.

மேற்கூறிய இவரது படைப்பிலக்கியப் பின்னணியில் நின்று இன்று புதிய வரவாக வெளிவந்திருக்கும் **ஒரு பெண்ணென்று எழுது** என்ற சிறுகதைத் தொகுப்பின் கதைகள் பற்றி கவனத்தைச் செலுத்துவோம்.

இத்தொகுப்பில் இடம்பெறும் முதலாவது கதை உண்மை உறங்குவதில்லை என்பதாகும். இது மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் மாத இதழான செங்கதிர் சஞ்சிகையின் முதலாவது இதழில் வெளிவந்திருந்தது. ஒரு மரமும் அரிக்கன் லாம்பும் முன்னிலைப் படுத்தப்படுவதாக இருந்தபோதிலும், புதிய உத்திமுறையை கையாண்டு அக்காலத்து மக்கள் வாழ்க்கையில் அடிநாதங்களை அறியவைக்கும் விதத்தில் இக்கதையின் போக்கு அமைந்துள்ளது.

இத்தொகுப்பில் இடம்பெறும் இரண்டாவது கதை சோம்பாமல் உலாவுகின்ற கண்கள் என்பதாகும். கடற்கரையில் நடக்கும் சம்பவங்களை இயற்கையின் வர்ணிப்போடு அமைந்த ஒருவனின் உள்மனக்கொதிப்பினை வெளிக்காட்டுகின்றது. அடுத்த கதை தலைப்பிடப்படாத சித்திரம். இதில் ஒரு குடிகாரக் கணவனுக்கும் மனைவிக்குமிடையே உள்ள உறவுகள் பேசப்படுகின்றன. ஒரு பெண்ணென்று எழுது என்ற தலைப்புச் சிறுகதை அன்றாட உணவுக்கே அல்லாடும் வறுமைக்கோட்டின் கீழுள்ள ஒரு குடும்பத்தின் கதையாக அமைகின்றது. நான் வேறொருவன் என்ற கதையில் இளம்வயதில் தன் கனவு அனுபவங்களை ஆசிரியர் எடுத்துக்கூறியுள்ளார்.

கோவில் அன்னதானம் என்ற கதை அன்றாடம் தம் வயிற்றை நிரப்ப வழிதேடும் ஒரு குடும்பத்தின் கதை. நெஞ்சை நெருடும் சில சம்பவங்களைக் கோவையாக்கி அதை எமது சிந்தனைக்கு விட்டுவிடுகின்றார் ஆசிரியர். அசையும் போதெல்லாம் என்ற கதை உளவியல்ரீதியாக பெண்களுக்கு ஏற்படும் மனக் கொந்தளிப்பை அழகாகச் சொல்லமுனைகின்றார். எனது துக்கம் என்ற கதையில் ராகவனும் அவன் நண்பன் நாகூர் பிச்சையும் பேய்ப்படம் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பும்போது ராகவனுக்கு ஏற்படும் மனப்பிராந்தியையும், வீட்டை அடைந்ததும் அவனது மரணமடைந்த ஆச்சியின் முகத்தைப் பார்த்ததும் மனக்கிலேசம் அடைந்து துக்கம் அனுபவிப்பதும் சுவையாகக் காட்டப்படுகின்றது. அவனறிந்த கடல் என்ற கதை ஒரு மீன்பிடிக் கிராமத்தில் ஆழிப்பேரலையின் அவலங்கள், ஏழை மீனவரின் பரிதாப நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் கொடுக்கப்படாமை என்று பல்வேறு அம்சங்களையும் பதிவுசெய்கின்றது. இயந்திரம் என்ற கதை ஒரு வாகனம் திருத்தும் நிலையத்தில் தொழில்பார்க்கும் ஊழியர்களின் வாழ்க்கை பற்றிப் பேசுகின்றது. தெளிதல் என்ற கதை மூடநம்பிக்கையை விரட்டி அடிப்பதாயும் அமைகின்றது.

சமுதாய நேயம்கொண்ட ஒரு படைப்பாளியாக, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தன்னைச் சூழ நடக்கும் விடயங்களை உள்வாங்கி, புதிய உத்திமுறைகளைக் கையாண்டு சிறுகதைகளாக அவற்றை வெளிப்படுத்துவதால் நீ.பீ.அருளானந்தத்தின் படைப்புக்கள் எப்பொழுதும் சுவாரஸ்யமானவையாகவே இருக்கின்றன.

# எனது பயணங்களில்.




ஜெயந்தன்.
(இயற்பெயர்: செபஸ்தியாம்பிள்ளை போல் ஜெயந்தன் பச்சேக்).
வவுனியா: அமலமரித் தியாகிகள் வெளியீடு, அமைதியகம்,
1வது பதிப்பு, சித்திரை 2008.
(வவுனியா: அமைதி அச்சகம், இல.26, **Goods Shed Road).**
**xii**, 100 பக்கம்,
விலை: ரூபா 100.,
அளவு: 21x14.5 சமீ.,
**ISBN**: 978-955-50884-0-4.

அமலமரித் தியாகிகள் என்ற கிறிஸ்தவ அமைப்பின் குருவான அருட்திரு போல் ஜெயந்தன் பச்சேக் அவர்களின் பயண அனுபவங்களின் சில சுவைமிகுந்த பக்கங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. வவுனியாவில் இருந்து அமலமரித்தியாகிகள் வெளியீடாக 2008இல் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் 100 பக்கங்களைக் கொண்டது.

மனித வாழ்க்கை பல அனுபவங்கள் நிறைந்தது. அனுபவங்களே வாழ்க்கையாகின்றது. ஒருவரின் அனுபவங்கள் ஏனையோருக்குப் பாடங்களாகப் பகிரப்படக்கூடியவை. அதனால்தான் பல அறிஞர்களின் கடந்தகால வாழ்நாட்கள் வரலாற்றுத் தடங்களாகப் பதியப்பட்டு விடுகின்றன. இந்த வகையிலேயே அருட்திரு ஜெயந்தன் அடிகள் தன் பயணங்களை ஒய்வுநேரக் கதைத் தொகுப்பாக வெளியிட்டிருக்கிறார்.

“இது என் வாழ்க்கைப் பயணமென்பதைவிட என் வாழ்க்கையைச் செய்த பயணங்கள் என்பேன்” என்று பீடிகையுடன் தொடங்கும் அருட்திரு ஜெயந்தன் அவர்களின் இப்பயண அனுபவங்கள் இன்னல்களுக்குள் எழுந்த கனதியான எமது சமகால வாழ்வியல் இலக்கிய வெளியீடாகும். இந்நூலைப் படிக்கும்போது அருள்திரு ஜெயந்தன் அடிகளுடன் நேரில் நின்று கதைகேட்கும் ஓர் இனிய உணர்வினை அனுபவிக்கமுடிகின்றது. இது பயணக்கட்டுரை அல்ல என்று இவர் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டாலும், தன் பயண அனுபவங்களினூடு வரலாற்றுப் பதிவுகள் சிலவற்றையும் தன் அனுபவங்களினூடாக இழையோட விட்டிருக்கின்றார் என்றே கருதுகின்றேன்.

வடபகுதியில் பூநகரி, கிளாலி, தாண்டிக்குளம், மன்னார் கடல்வழியாக இந்தியப் பயணம் மேற்கொண்டு சென்றடைந்த பலர் இன்னமும் உயிரோடிருக்கிறார்கள். நெஞ்சில் நீங்காத நினைவுகளாக அநேகமானோர் இவற்றை இன்றும் மனதில் சுமந்தே வாழ்கிறார்கள். அவற்றை இந்நூல் அச்சொட்டாகச் சித்திரிக்கின்றது. இலக்கியவாதிகள் வரலாற்றைக் கதைகளாக்குவதை நாம் கண்டிருக்கின்றோம். சொல்ல வந்த கதைகளை வரலாறுகளினூடாக ஓடவிடும் எழுத்தாளர்களும் எம்மிடையே உண்டு. அருட்திரு ஜெயந்தன் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர். அவரது சொந்த வரலாறும் இப்பயண அனுபவங்கள் மூலம் வெளிப்பட்டு எமது மனதை கனக்கச் செய்கின்றது. இவர் இவற்றை ஓய்வுநேரக் கதைத் தொகுப்புகளாகச் சித்திரித்தாலும் கூட, அவை ஒரு காலகட்டத்து ஈழத்தமிழரின் பயண வரலாறு என்பதை மறுக்கமுடியாது. ஒவ்வொரு பயணத்திலும் ஆச்சர்யமும் சுவாரஸ்யமும் கலந்திருக்கின்றன. ஒவ்வொரு பயணத்திலும் ஒவ்வொரு அனுபவப் பாடத்தை போதித்துவைத்திருக்கிறார். இது வாசகரின் சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்துவிடுகின்றது. இப்பயணப் பகிர்வில் தன் குறும்புத் தனங்களைக் குறித்துக்காட்டும் வேளையில் நாம் இவரது இறைநம்பிக்கை, விசுவாசம், பிறரன்பு, இறைபணியின் பாற்பட்ட ஆர்வம் போன்ற பண்புகளை உள்ளும் புறமும் இனங்காண முடிகின்றது. இதிலுள்ள 50 சிறிய கட்டுரைகளினதும் எழுத்துநடையில் ஒரு நகைச்சுவைப் பாணி இழையோடுகின்றது. மொழி நடையில் ஒரு தனித்துவமான பாணி பின்பற்றப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. ஒரு இடத்தில் தனது தாயின் கருத்துக்கு மறுப்புக் கருத்தைச் சொல்ல இயலாதுபோன இடத்தில் அதை “பாதுகாப்புக் காரணங்களுக்காக வாயை மூடிக்கொண்டோம்” என்று கூறிச் சிரிக்க வைக்கிறார். இத்தகைய அங்கதச் சுவையூட்டும் இவரது வரிகள் சோகத்திலும் சிரிப்பினை மூட்டுகின்றன. இவ்வாறு இந்நூல் பழைய நினைவுகளின் ஏக்கம், இராணுவப் பாதுகாப்பு நடைமுறைகளில் உள்ள துயரம், சூழ்நிலைகள் மீதான எண்ணல், தன் கையாலாகாத தனத்தைப்பற்றிய சுயஅனுதாபம், நல்லவிடயங்களில் உள்ள பிடிப்பும் அழுத்தமும், வாழ்வின்மீதான நம்பிக்கை, பிரதேசத் தமிழும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஏற்படும் ஆங்கில மொழிப்பாவனையும் ஆற்றொழுக்கான சித்திரிப்பின் லாவகம், காட்சி மாறிக் காட்சிகளை விபரிக்கும் யுக்தி இவை அனைத்தும் ஒருமித்து இருப்பதால் இந்நூல் சுவாரஸ்யமாக வாசிக்கத் தூண்டுகின்றது.




**நீங்களும் எழுதலாம்** என்ற தலைப்பில் கவிதை இதழ் ஒன்று கடந்த 2007ம் ஆண்டிலிருந்து திருக்கோணமலையிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. எஸ்.ஆர்.தனபாலசிங்கம் அவர்கள் வெளியிடும் இச்சஞ்சிகை இருமாதக் கவிதையிதழாகும். தமிழகத்திலிருந்து கவிதைக்கென்றே ஏராளமான இதழ்கள் இதுவரை மலர்ந்து மணம்பரப்பிவந்துள்ளன. பாவேந்தர் பாரதிதாசனின் குயில், கவியரசு கண்ணதாசன் நடத்திய தென்றல் என்பன குறிப்பிடத்தக்கவை. இவை பின்னாளில் ஈழத்தமிழரிடமும் கவிதைக்கான தனித்துவமான இதழ்களை மலர்விக்கும் எண்ணத்தை வளர்த்தன. கவிஞன், நோக்கு, அக்னி, விடிவெள்ளி, பூபாளம், வகவம், கவிதை, யாத்ரா, மற்றும் புகலிடத்தில் ஜேர்மனியில் கலைவிளக்கு எனத் தொடர்ந்தன கவிதை இதழ்கள். அவ்வகையில் இன்றைய **நீங்களும் எழுதலாம்** என்ற கவிதை இலக்கியச் சிற்றிதழையும் சேர்த்துக்கொள்ளலாம். இவ்விதழின் பிரதிகளைப் பெறவோ, ஆக்கங்களை வழங்கிடவோ விரும்பும் கவிதைப்பிரியர்கள், எஸ். ஆர். தனபாலசிங்கம், 103/1 திருமால் வீதி, திருக்கோணமலை என்ற முகவரிக்கு கடிதமூலமும் 0094 26 222 0398 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஆசிரியருடன் தொடர்புகொள்ளலாம்